திரு/தி/சென் மேரிஸ் கல்லூரி
(தேசிய பாடசாலை)
மூன்றாம் தவணைப் பரீட்சை

**வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்**
**தரம் - 10** **03 மணித்தியாலம்**

**முதலாவது வினா கட்டாய வினாவாகும். பகுதி I இல் இரு வினாக்களுக்கும் பகுதி II இல் இரு வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு விடை தருக.**

1)
**பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு வினா i முதல் x வரையான வினாக்களுக்கு விடை தருக.**

அருணன் தன்னிடமுள்ள ரூ 500000 ஐ மூலதனமாக இட்டு 01.01.2021 இல் ஆடையகம் ஒன்றை ஆரம்பித்தார். இதற்காகத் தன்னிடமிருந்த ரூ 700000 பெறுமதியான மோட்டார் வாகனத்தையும் வணிகத்திற்கென ஈடுபடுத்தினார். பின்னர் ரூ200000 ஐ வங்கியிலிட்டு 12.01.2021 ல் நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பித்தார். வணிகத்தை விஸ்தரிப்பதற்காக ரூ 350000 ஐ வங்கியிலிருந்து கடனாகப் பெற்றுக் கொண்டார். இவர் தனது வணிகத்திற்கு 'அருணன் டெக்ஸ்டைல்ஸ்' எனப் பெயரிட்டார்.

(i) இந்நிறுவனம் எவ்வகை வணிக அமைப்பாகும் எனக் குறிப்பிடுக.

(ii) இவ்வணிக அமைப்பைப் பதிவு செய்யும் சட்டம் யாது?

(iii) இவ் அமைப்பைப் பதிவு செய்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள் 02 தருக.

(iv) இவ்வணிகம் எதிர்கொள்ளக் கூடிய பிரதான அச்சுறுத்தல் ஒன்றை எழுதுக.

(v) 'அருணன் டெக்ஸ்டைல்ஸ்' வணிகத்தின் அனுகூலங்கள் பிரதிகூலங்கள் தலா 02 தருக.

(vi) இவ்வணிகத்தின் சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பவற்றிற்கு தலா 01 உதாரணம் தருக.

(vii) 01.01.2021இல் உள்ளவாறான கணக்கீட்டுச் சமன்பாட்டைத் தருக.
( சொத்து = மூலதனம் + பொறுப்பு)

(viii) 12.01.2021இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப் பதிவைத் தருக.

(ix) இக்கொடுக்கல் வாங்கல்களின் பின்னரான காசு மீதியைக் காண்க.

(x) அருணன் இட்ட மூலதனம் யாது?

**(20 புள்ளிகள்)**

## பகுதி – I வணிகக் கல்வி

### (இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

2) (i) (அ) பொதுவாகக் காணப்படக் கூடிய வணிக நோக்கங்கள் 02 தருக.
(ஆ) தேவை, விருப்பங்களின் பண்புகள் தலா 02 தருக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.
(அ) ஊழியர்களிலிருந்து பல்வேறுபட்ட மேல் மட்ட முகாமையாளர் வரையில் பல்வேறு தொழில் வாய்ப்புக்கள் வணிகங்கள் மூலம் உருவாக்கப்படுகின்றன.
(ஆ) நிலத்திலிருந்து கிடைக்கப் பெறும் அநேகமான வளங்கள் வரையறுக்கப்படாதவையாகவே உள்ளன.
(இ) பொருட்கள் சேவைகளை மீள் விற்பனை செய்யும் நோக்கத்துடன் கொள்வனவு செய்வோர் வாடிக்கையாளர் எனப்படுவர்.
(ஈ) இலங்கையிலுள்ள வங்கிகளின் ஆலோசனையின் பிரகாரம் பொருளாதாரக் கொள்கைகள் தீர்மானிக்கப்படுகின்றன. (02 புள்ளிகள்)

(iii) சாருலதா என்பவர் கைத்தறி நெசவின் மூலம் ஆடைகளை தயாரித்து விற்பனை செய்யும் வணிகத்தை நடாத்தி வருகின்றார்.
(அ) சாருலதாவின் வணிகத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படும் அடிப்படை மனிதத்தேவை யாது?
(ஆ) நெசவிற்குப் பயன்படும் நூலானது மேற்கூறப்பட்ட வணிகத்தின் உற்பத்திக் காரணியான நிலத்திற்கு உரித்தானதாகும். இக்கூற்றை நீர் ஏற்கின்றீரா? காரணம் தருக. (02 புள்ளிகள்)

(iv) சுருதி என்பவர் கேக் தயாரித்தல் மற்றும் வடிவமைப்பு பாடநெறியைப் பூரணமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் தனது தங்கையின் உதவியுடன் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்து தனது வீட்டின் ஒரு பகுதியில் கேக் தயாரிக்கும் வணிகமொன்றை ஆரம்பித்தார்.
(அ) சுருதியின் வணிகத்தில் அக்கறை காட்டும் இரு தரப்பினர் யாவர்?
(ஆ) இவ்வணிகத்தில் அக்கறையுடையோர் ஆர்வம் காட்டுவதற்கான காரணங்கள் தலா 01 தருக. (02 புள்ளிகள்)

**(08 புள்ளிகள்)**

3) (i) (அ) அரசாங்கத்திடமிருந்து வணிகம் எதிர்பார்க்கும் பங்களிப்புக்கள் 02 தருக.
(ஆ) ‘ஊழியர்’ எனப்படுவோர் யாவர்? (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.
(அ) நாடொன்றில் சேமிப்புக்கள் அதிகரிக்கும் போது முதலீட்டிற்காகப் பயன்படுத்தக் கூடிய பண அளவு உயர்வடையும்.
(ஆ) தனியாள் உரிமை வணிகத்தில் வணிகப் பெயரிலேயே சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க முடியும்.
(இ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் உயர்ந்த அங்கீகாரம் கொண்டிருப்பதால் வெளியாரிடமிருந்து இலகுவாக நிதியைத் திரட்டிக் கொள்ளலாம்.
(ஈ) அரச திணைக்களங்களில் சுயாதீனத் தன்மை காணப்படாதிருப்பினும் உரிய காலப்பகுதியினுள் தீர்மானத்தை மேற்கொள்ளலாம். (02 புள்ளிகள்)

(iii) சிவராம் என்பவர் கிராமப்புறப் பாடசாலையொன்றின் அருகில் எழுது கருவிகள் மற்றும் காகிதாதிகள் விற்பனை செய்யும் வணிகத்தினை நடாத்தி வருகின்றார். இரு வாரங்களுக்கு முன்பு சரத் என்பவர் தனது எழுது கருவிகள் விற்பனை செய்யும் வணிகமொன்றை சிவராமின் வணிகத்திற்கு அண்மையில் அமைத்திருந்தார்.
(அ) சிவராம் வணிகத்தின் வாய்ப்பாக எதனைக் கூறலாம்?
(ஆ) சிவராம் வணிகத்தின் அச்சுறுத்தலாகக் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(iv) வணிகப் பெயர்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
a) ஆரோக்யா வைத்தியசாலை
b) சுதேசி இலைக்கஞ்சி

c) டிசைனர் கைத்தறி உற்பத்தியாளர்கள்

d) தினு டிரவல்ஸ்

(அ) மேற்குறித்த ஒவ்வொரு வணிகத்தினாலும் நிறைவேற்றப்படும் மனிதத்தேவை யாது?

(ஆ) அவற்றை உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(08 புள்ளிகள்)**

4) (i) (அ) உரிமை அடிப்படையில் வணிக அமைப்பை வகைப்படுத்துக. (03 புள்ளிகள்)

(ஆ) உரிமையாளரொருவர் 'தலைவர்' என்ற வகையில் ஆற்ற வேண்டிய கருமங்கள் 02 தருக. (01 புள்ளிகள்)

(ii) சுதன் தனித்து தீர்மானம் எடுப்பதில் விருப்பம் கொண்டவர். மேலும் எக்கருமங்களையும் அதிக அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதுடன் தனித்துப் பொறுப்பேற்கும் ஆற்றலையும் கொண்டவர்.

வினீத் குழுவாகக் கடமையாற்றல், பரஸ்பர பரிந்துணர்வு சுமுகமாகத் தீர்மானம் எடுத்தலுடன் இடர்களைப் பகிர்ந்து கொள்வதிலும் விருப்பமுடையவராவார்.

(அ) மேலே தரப்பட்ட கூற்றுக்களின் படி சுதன்,வினீத் ஆரம்பிக்க வேண்டிய வணிகவகைகளைக் தனித்தனியே குறிப்பிடுக.

(ஆ) இவ்வணிக அமைப்புக்களால் அவர்கள் பெறக்கூடிய அனுகூலம் பிரதிகூலம் தலா 02 தருக. (02 புள்ளிகள்)

(iii) வணிகமொன்றின் அகச்சூழல் மற்றும் புறச்சூழலில் பல்வேறு பிரிவினரோடு பல்வேறு காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

(அ) அத்தகைய இரு வகையான காரணிகளிலும் தலா 03 தருக.

(ஆ) சட்டதிட்டங்களைச் செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள பதவிகள் மற்றும் நிறுவனங்கள் தலா 02 தருக. (02 புள்ளிகள்)

**(08 புள்ளிகள்)**

## பகுதி – II கணக்கீடு

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

5) (i) (அ) 'நிதி அறிக்கைகள்' என்பதனால் நீர் கருதுவது யாது?

(ஆ) சொத்தொன்றின் பண்புகள் 02 தருக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டைப் பதிவை எழுதுக.

(அ) வணிகத்தின் மாதாந்த வாடகையாக ரூ8000 செலுத்தப்பட்டது.

(ஆ) ரூ75000 பெறுமதியான தளபாட உபகரணங்கள் காரியாலய பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்டன. (02 புள்ளிகள்)

(iii) குமுதா வணிகத்தின் ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| திகதி | சொத்து | | | உரிமை | பொறுப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | தளபாடம் | இருப்பு | காசு | மூலதனம் | வங்கிகடன் | கடன் கொடுத்தோர் |
| 03.01 | | | +300000 | +300000 | | |
| 10.01 | | +15000 | -15000 | | | |
| 15.01 | +50000 | | | | | +50000 |
| 23.01 | | | +100000 | | +100000 | |
| 28.01 | | -36000 | +46000 | +10000 | | |

மேற்படி தாக்கங்களுக்குரிய ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலையும் எழுதுக.

(06 புள்ளிகள்)

(iv) (அ) பொறுப்புக்களின் வகைகளைக் குறிப்பிட்டு தலா 02 உதாரணங்கள் தருக.

(ஆ) வணிகமொன்றின் உரிமையில் குறைவு ஏற்படுவதற்கான காரணங்கள் 02 தருக.

(02 புள்ளிகள்)

**(12 புள்ளிகள்)**

6) (i) (அ) காசோலையொன்று மறுக்கப்படுவதற்கான காரணங்கள் 02 தருக.

(ஆ) பின்வருவனவற்றுக்கான மூலஆவணங்களைக் குறிப்பிடுக.

a) வங்கியில் வைப்பிலிட்ட பணத்தை பதிவு செய்தல்

b) காசோலை மூலமாக மேற்கொண்ட கொடுப்பனவுகள் (02 புள்ளிகள்)

(ii)

கோமதி வணிகத்தின் 2021.11.01 காணப்பட்ட மீதிகள் வருமாறு :

மூலதனம் ரூ200000

கடன் பட்டோர்

ரவி ரூ 54000

கடன் கொடுத்தோர்

எஸ்தர் ரூ29000

நொவெம்பர் மாதத்தில் இடம்பெற்ற பணக் கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு :

| திகதி | பற்றுச்சீட்டு இலக்கம் | கைச்சாத்து இலக்கம் | நிகழ்வு |
|---|---|---|---|
| 03.11 | | | வங்கியில் ரூ200000 வைப்பிலிட்டு நடைமுறைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டது. |
| 05.11 | | 003 | காசுக் கொள்வனவு ரூ80000 |
| 06.11 | 044 | | ரவியிடமிருந்து கிடைத்த ரூ6000 பெறுமதியான காசோலை அச்சந்தர்ப்பத்திலேயே வைப்பிலிடப்பட்டது. |
| 09.11 | 045 | | ரவியிடமிருந்து கிடைக்கப் பெற்ற காசு ரூ18500 ஆக இருந்ததுடன் அனுமதிக்கப்பட்ட கழிவு ரூ1500 |
| 12.11 | 046 | | காசிற்கு விற்பனை ரூ 35000 |
| 14.11 | | 004 | எஸ்தருக்குரிய ரூ15000 கடன் கொடுப்பனவு 5% கழிவு நீக்கிச் செலுத்தப்பட்டது. |
| 20.11 | | | ரவியிடமிருந்து பெற்று வைப்பிலிடப்பட்ட ரூ6000 காசோலை மறுக்கப்பட்டது. |
| 24.11 | | 005 | சம்பளமாக ரூ 6000 செலுத்தப்பட்டது |
| 28.11 | 047 | | மேலதிக மூலதனமாக கோமதி ரூ30000 ஐ வணிகத்தில் ஈடுபடுத்தினார். |

வேண்டப்படுவது :

1) கழிவு நிரலுடன் கூடிய காசேடு, வங்கிக்கணக்கைத் தயாரித்து 2021.11.30 அன்று சமப்படுத்துக.

2) காசேட்டில் பதிவு செய்த கொடுக்கல் வாங்கல்களை பேரேட்டுக் கணக்குகளிற்கு மாற்றுக. (10 புள்ளிகள்)

**(12 புள்ளிகள்)**

7) (i) (அ) வங்கிக் கூற்று எனப்படுவது யாது?

(ஆ) வழங்கப்பட்ட காசோலையொன்று வங்கியினால் மறுக்கப்படும் போது அதற்கான இரட்டைப் பதிவினைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) தர்மிலா வணிகத்தின் 2021 மே மாதத்திற்கான வங்கிக் கணக்கு, வங்கிக் கூற்று வருமாறு :

| திகதி | ப. இ | விபரம் | பே. ப | தொகை (ரூ) | திகதி | கை. இ | விபரம் | பே. ப | தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 05/01 | | மீ.கீ.கொ.வ | | 50000 | 05/05 | | காசோலை - 212345 | | 5000 |
| 05/03 | | காசு வைப்பு | | 9000 | 05/06 | | காசோலை – 212346 | | 40000 |
| 05/07 | | காசோலை வைப்பு | | 15000 | 05/15 | | காசோலை – 212347 | | 5000 |
| 05/20 | | காசு வைப்பு | | 30000 | 05/23 | | காசோலை - 212348 | | 10000 |
| 05/25 | | காசோலை வைப்பு | | 50000 | 05/31 | | மீ.கீ.கொ.செ | | 94000 |
| | | | | **154000** | | | | | **154000** |

2021 மே மாதத்திற்கான வங்கிக்கூற்று

| திகதி | விபரம் | வரவு ரூ | செலவு ரூ | மீதி ரூ |
|---|---|---|---|---|
| 01.05.2021 | மீ.கீ.கொ.வ | | | 50000 |
| 03.05.2021 | காசு வைப்பு | | 9000 | 59000 |
| 06.05.2021 | காசோலை – 212346 | 40000 | | 19000 |
| 07.05.2021 | காசோலை வைப்பு | | 15000 | 34000 |
| 13.05.2021 | நிலையான கட்டணங்கள் | 4000 | | 30000 |
| 15.05.2021 | காசோலை – 212347 | 5000 | | 25000 |
| 18.05.2021 | நேரடி வைப்புக்கள் | | 7000 | 32000 |
| 21.05.2021 | பங்குலாபங்கள் | | 500 | 32500 |
| 30.05.2021 | வங்கிக் கட்டணங்கள் | 1000 | | 31500 |

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

1) 2021.05.31 வங்கிக் கணக்கு மீதியைச் சீராக்கம் செய்தல்

2) சீராக்கப்பட்ட வங்கிக்கணக்கின் மீதியைப் பயன்படுத்தி வங்கிக்கணக்கிணக்கக்கூற்றைத் தயாரித்தல்.

(08 புள்ளிகள்)

(iii) (அ) குமார் தனது கடன் கொடுத்தோரான ரஞ்சன் அனுப்பிய பட்டியலில் ‘3/30/தேறிய/50’ எனக் குறிப்பிட்டிருப்பதை அவதானித்தார். இவ்வாறு குறிப்பிட்டிருப்பதன் விளக்கத்தைத் தருக.

(ஆ) பொது நாட்குறிப்பேட்டில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல்கள் 02 தருக.

(02 புள்ளிகள்)

**(12 புள்ளிகள்)**

8) (i) (அ) சில்லறைக் காசு வசக்கட்டு எனப்படுவது யாது?

(ஆ) சில்லறைக் காசேடு மூல ஏடொன்றாகத் தொழிற்படுகின்றதா? காரணம் தருக.

(02 புள்ளிகள்)

(ii)

சுந்தரம் வணிகத்தின் 2021 ஆகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற சில்லறைக் காசுக் கொடுப்பனவுகளுக்குரிய தகவல்கள் வருமாறு :
சில்லறைக் காசு கட்டுநிதி ரூ 3000 ஆக இருந்தது.

| | | (ரூபா) |
|---|---|---|
| 01.08.2021 | மீதி | 800 |
| 01.08.2021 | மீதி மீள் நிரம்பல் செய்யப்பட்டது | |
| 04.08.2021 | தபால் கட்டணம் | 210 |
| 09.08.2021 | உபசரணைச் செலவு | 420 |
| 14.08.2021 | முச்சக்கரவண்டி செலவு | 750 |
| 19.08.2021 | உட்சுமை கூலி | 540 |
| 25.08.2021 | சுத்திகரிப்புச் செலவு | 360 |
| 26.08.2021 | மோகனிற்குக் கொடுத்தது | 500 |

வேண்டப்படுவது :

1)அஞ்சல் செலவு, பிரயாணச் செலவு, உபசரணைச் செலவு, நானாவித செலவு, பேரேட்டுக் கணக்கு எனும் பகுப்பாய்வு நிரல்களுடன் கூடிய சில்லறைக் காசேடு

2)பேரேட்டுக் கணக்குகள்

(08 புள்ளிகள்)

(iii) (அ) தொலைபேசி வங்கிச் சேவையினூடாக வணிகர் ஒருவர் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகள் 02 தருக.

(ஆ) நிகழ்காலத்தில் பயன்படுத்தப்படும் கணக்கீட்டு மென்பொருள் பொதிகள் 04 தருக.

(02 புள்ளிகள்)

**(12 புள்ளிகள்)**